(அஅ) மதுரை வடக்கு தொகுதி, தல்லாகுளம், வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள்.*

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதி, தல்லாகுளம் கிராமம், சர்வே எண் 80/1–ல் உள்ள 27.50 ஏக்கர் சுமார் 30 ஆண்டுகாலமாகக் குடியிருந்து வருகிற புறம்போக்கு நிலம் கிராம நத்தம் என வகை மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, தல்லாகுளம் கிராமம், சர்வே எண் 80/1–ல் பாரத் நகர் பகுதியில் இருக்கிற 27.50 ஏக்கர் நிலத்திற்கும், டி.ஆர்.ஓ. காலனியில் 40 ஆண்டுகாலமாகக் குடியிருந்து, அனைத்து வசதிகளையும் பெற்றிருக்கிற சுமார் 350 குடியிருப்புகளுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கிட மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

(அஆ) கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், இணை மின் உற்பத்தித் திட்டம், பணிகளை விரைவுபடுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.*

திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள 12 பொது மற்றும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தித் திட்டம்* (co–generation) *தொடங்கப்பட்டு 40 சதவிகிதம் பணிகள் மட்டுமே நடைபெற்றிருக்கின்றன. குறிப்பாக வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை வேலை முடிந்திருக்கிறது. மீதமுள்ள 11 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் 40 சதவிகிதம் வேலை மட்டுமே நடைபெற்றிருக்கின்றன. அதற்குரிய பொருட்களெல்லாம் மழையிலும், வெய்யிலிலும் வீணடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து அந்தத் திட்டத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலுள்ள கள்ளக்குறிச்சி 2–வது கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, 1–வது கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், நீங்கள் சுருக்கமாகப் பேசக் கற்றுக்கொள்ளுங்கள்.

திரு. தா. உதயசூரியன்: ஆகமொத்தம் 12 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் மட்டும்தான் இணை மின் உற்பத்தி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மீதமுள்ள 11 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் co–generation திட்டப் பணிகள் 40 சதவிகிதம் மேற்கொள்ளப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கிறது. அது தொடர்ந்து நடைபெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

(அஇ) நீர்நிலைகள், சீமைக் கருவேல மரங்களை அகற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். தங்கதுரை அவர்கள்.

திரு. ஆர். தங்கதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நிலக்கோட்டையில் பெரிய கண்மாய் இருக்கிறது. அந்தக் கண்மாயில் இருக்கின்ற முட்களையெல்லாம் நான் பதவியேற்றவுடனேயே அப்புறப்படுத்திவிட்டேன். ஆனால், மீதமுள்ள குளங்கள் அனைத்திலும் சீமைக் கருவேல முட்கள் நிறைந்திருக்கின்றன. நிலக்கோட்டைத் தொகுதி மட்டுமல்லாமல், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் குளங்களிலும் சீமைக் கருவேல முட்களை அகற்றினால் குடிதண்ணீர் பிரச்சினை இல்லாமல் இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கின்றேன்.

முற்பகல் 10–25

(அஈ) மாதவரம் பால் பண்ணை மருத்துவமனை, வசதிகள் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதவரம் தொகுதிக்குட்பட்ட மாதவரம் பால்